සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது /All Rights Reserved]

නව නිර්දේශය/புதிய பாடத்திட்டம்/New Syllabus

NEW

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

63 T I, II

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (සාමාන්‍ය පෙළ) විභාගය, 2016 දෙසැම්බර්
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை, 2016 டிசெம்பர்
General Certificate of Education (Ord. Level) Examination, December 2016

ව්‍යවසායකත්ව අධ්‍යයනය I, II
முயற்சியாண்மைக் கற்கை I, II
Entrepreneurship Studies I, II

පැය තුනයි
மூன்று மணித்தியாலம்
*Three hours*

## முயற்சியாண்மைக் கற்கை I

**கவனிக்க :**

(i) **எல்லா** வினாக்களுக்கும் விடை எழுதுக.
(ii) **1** தொடக்கம் **40** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1), (2), (3), (4) என இலக்கமிடப்பட்ட விடைகளில் **சரியான** அல்லது **மிகப் பொருத்தமான** விடையைத் தெரிவுசெய்க.
(iii) **உமக்கு வழங்கப்பட்டுள்ள விடைத்தாளில் ஒவ்வொரு வினாவுக்கும் உரிய வட்டங்களில் உமது விடையின் இலக்கத்தை ஒத்த வட்டத்தினுள்ளே புள்ளடியை (×) இடுக.**
(iv) அவ்விடைத்தாளின் மறுபக்கத்தில் தரப்பட்டுள்ள மற்றைய அறிவுறுத்தல்களையும் கவனமாக வாசித்து, பின்பற்றுக.

**1.** முயற்சியாண்மையில் காணத்தக்க அடிப்படைக் குணவியல்பாவது,
(1) நடைமுறையிலுள்ள எண்ணங்கள் மற்றும் எண்ணக்கருக்கள் அதே விதமாகத் தொடர்வதற்கு அனுமதித்தலாகும்.
(2) நடைமுறையிலுள்ளவற்றின் மீது விழிப்புடன் இருந்து புதிய மாற்றத்தை உருவாக்குவதற்கு முயற்சித்தலாகும்.
(3) இடர்களைப் புறக்கணித்து வணிக நடவடிக்கைகளில் ஈடுபடுதலாகும்.
(4) இலாபத்தை உச்சப்படுத்துவதற்காக மாத்திரம் பணியாற்றுதலாகும்.

**2.** முயற்சியாளர் ஒருவர் எப்பொழுதும் நம்புவது
(1) தன்னையாகும். (2) ஏனையோரையாகும். (3) அதிஷ்டத்தினையாகும். (4) தலைவிதியையாகும்

**3.** ஏனையோரின் கருத்துக்களை மதிக்கின்றபோதும் அதன் மீது தங்கியிருக்காமையும் தாம் செல்ல வேண்டிய வழியைத் தாமே தீர்மானித்தலும் முயற்சியாண்மையில்
(1) சுதந்திரமெனக் கருதலாம். (2) பொறுப்பு எனக் கருதலாம்.
(3) சவால்கள் எனக் கருதலாம். (4) சாதகமான தன்மை எனக் கருதலாம்.

**4.** வணிக எண்ணமொன்றை அமுல்படுத்துகையில் 'இடரை ஏற்றுக்கொள்ளுதல்' என்பதனால் கருதப்படுவது யாது?
(1) அவ் எண்ணமானது வெற்றிகரமானதாக அல்லது வெற்றிகரமற்றதாகக் காணப்படுதல்
(2) அவ் எண்ணம் வெற்றிகரமற்றதாகக் காணப்படுதலுக்கு உயர்வான சாத்தியம்
(3) அவ் எண்ணத்தை அமுல்படுத்துவதில் சிக்கலானதன்மை காணப்படுதல்
(4) அவ் எண்ணத்தின் முடிவானது குறித்த ஒன்றாகக் காணப்படுதல்

**5.** முயற்சியாண்மையில் முயற்சியாளருக்கான ஓர் அனுகூலமாக அமைவது
(1) புதிய பொருட்கள் மற்றும் சேவைகளைச் சந்தைக்கு வழங்குதலாகும்.
(2) ஏற்றுமதியின் மூலம் வெளிநாட்டு நாணயமாற்றைச் சம்பாதிக்கும் ஆற்றலாகும்.
(3) பொருளாதார அபிவிருத்திக்குப் பங்களிப்புச் செய்தலாகும்.
(4) சுதந்திரமும் ஆகக் கூடிய திருப்தியும் ஆகும்.

**6.** முயற்சியாளர் ஒருவரின் வகிபாகங்களை உள்ளடக்கியுள்ள சரியான விடையைத் தெரிவுசெய்க.
(1) உடைமையாளர், முகாமையாளர், தலைவர்
(2) முகாமையாளர், புத்தாக்குனர், தலைவர்
(3) தலைவர், வழங்குனர், முகாமையாளர்
(4) உடைமையாளர், முகாமையாளர், உற்பத்தியாளர்

**7.** சூழலின் மாற்றங்களுக்கு ஏற்றவாறு இயைபாக்கமடைவதற்கான ஆற்றல் என்பது,
(1) நெகிழ்வுத்தன்மை ஆகும். (2) திடசங்கற்பம் ஆகும்.
(3) சுதந்திரமாகும். (4) அர்ப்பணிப்பு ஆகும்.

[பக். 2 ஐப் பார்க்க

**8.** சூழலில் காணப்படும் வாய்ப்புக்களை இனங்கண்டு இடர்களைத் தாங்கிக்கொண்டு புத்தாக்கங்களை உருவாக்கும் நபர்
(1) வணிகர் ஆவார். (2) வழங்குனர் ஆவார்.
(3) முயற்சியாளர் ஆவார். (4) உற்பத்தியாளர் ஆவார்.

**9.** இடருக்கும் வெகுமதிக்கும் இடையிலான தொடர்பை விளக்கும் சரியான கூற்றைத் தெரிவுசெய்க.
(1) இடர் உயர்வானதாயின் வெகுமதியும் உயர்வானதாகும்.
(2) இடர் தாழ்வானதாயின் வெகுமதி உயர்வானதாகும்.
(3) இடர் உயர்வானதாயின் வெகுமதி தாழ்வானதாகும்.
(4) இடரின் தன்மை எதுவாகினும் வெகுமதி உயர்வானதாகும்.

**10.** நபர் ஒருவர் உயிர்வாழ்வதற்கு அத்தியாவசியமான அடிப்படை அம்சங்கள்
(1) தேவைகள் (2) விருப்பங்கள் (3) பொருட்கள் (4) சேவைகள்

**11.** மனிதத் தேவைகளையும் விருப்பங்களையும் நிறைவேற்றும் பொருளொன்றில் காணத்தக்க குணவியல்பு
(1) தொட்டுணர முடியாத்தன்மை
(2) ஒரு சீரான தன்மையை பாதுகாப்பதற்கான ஆற்றல்
(3) களஞ்சியப்படுத்த முடியாத்தன்மை
(4) வழங்குனரிடமிருந்து வேறுபடுத்த முடியாத தன்மை

**12.** பின்வரும் கூற்றுக்களில் முயற்சியாளர் தொடர்பிலான சரியான கூற்றைத் தெரிவுசெய்க.
(1) முயற்சியாளர் என்பவர் மரபுரீதியானவரும் சம்பிரதாயபூர்வமானவரும் ஆவார்.
(2) முயற்சியாளர் என்பவர் குறுங்கால நோக்கங்களை உருவாக்குபவர் ஆவார்.
(3) முயற்சியாளர் என்பவர் போட்டித் தன்மைக்கு முகங்கொடுக்க விருப்பமற்றவர் ஆவார்.
(4) முயற்சியாளர் என்பவர் இடர்களுக்கான கணிப்பீட்டை கவனமாக மேற்கொண்ட பின்னர் தாங்கக்கூடிய இடரை மட்டும் ஏற்றுக்கொள்பவர் ஆவார்.

**13.** சமூகப் பிரச்சினைகளுக்கு ஆக்கபூர்வமான தீர்வுகளை வழங்கும் நபர்
(1) அக முயற்சியாளர் (2) சமூக முயற்சியாளர்
(3) வணிக முயற்சியாளர் (4) ஆக்கத்திறனான முயற்சியாளர்

**14.** தற்போதைய உற்பத்திப்பொருள், சேவை அல்லது செயன்முறை ஒன்றுக்கு புதிய பாவனை ஒன்றைச் சேர்த்தல் புத்தாக்கமுறை ஆகும். இதனை எதுவாக இனங்காண முடியும்?
(1) இணைப்பாக (2) போலியாக
(3) புதிய கண்டுபிடிப்பாக (4) நீடிப்பாக

**15.** சந்தைப்படுத்தல் திட்டத்தைத் தயாரிக்கும்போது கருத்திற் கொள்ளப்படும் காரணிகளை உள்ளடக்கியுள்ள தொகுதியைத் தெரிவுசெய்க.
(1) இலக்குச் சந்தை, சந்தைப்படுத்தல் உபாயங்கள், விற்பனைப் பிரதேசம்
(2) அலகுக் கிரயம், சந்தைப்படுத்தல் உபாயங்கள், இலக்குச் சந்தை
(3) ஊழியர் சம்பளங்கள், அலகுக் கிரயம், விற்பனைப் பிரதேசம்
(4) பதவிநிலைகளும் பொறுப்புக்களும், ஊழியர் சம்பளங்கள், அலகுக் கிரயம்

**16.** சிற்றளவு வணிகத்தின் குணவியல்பு
(1) பொது உடைமையாக இருத்தல்
(2) ஏனைய வணிகங்களுடன் ஒப்பிடும்போது குறைந்தளவான ஊழியர்களைக் கொண்டிருத்தல்
(3) முதலீடு உயர்வானதாக அமைதல்
(4) வணிக நடவடிக்கைகள் பெரிய பிரதேசமொன்றில் பரவிக் காணப்படுதல்

**17.** பின்வருவனவற்றுள் மிகவும் பொருத்தமான வாக்கியத்தைத் தெரிவுசெய்க.
(1) பேரளவு வணிகங்கள் ஊடாகவே பெரும்பாலான புத்தாக்கங்கள் தோன்றியுள்ளன.
(2) ஏற்கனவே நுகர்வோரது தேவைகளை நிறைவேற்றிய சந்தை, 'சந்தைவெளி' என அழைக்கப்படும்.
(3) பெரும்பாலான வெற்றிகரமான பேரளவு வணிகங்கள் சிற்றளவு வணிகங்களாகவே ஆரம்பிக்கப்பட்டன.
(4) பெரும்பாலான பேரளவு வணிகங்களது வணிக நடவடிக்கைகள் ஒரு சிறிய பிரதேசத்துக்கு வரையறுக்கப்பட்டதாகும்.

**18.** செயன்முறைத் தேவை விளைவொன்றாக நிகழ்ந்த ஒரு புத்தாக்கம்
(1) விறகு வழங்கலின் வீழ்ச்சியின் காரணமாக மின்சார உபகரணங்களைப் பயன்படுத்தி உற்பத்தி செய்தல்.
(2) பகல்நேரப் பராமரிப்பு (Daycare) நிலையங்களை ஆரம்பித்தல்
(3) புதிய கணினி வன்பொருள்களை அறிமுகஞ் செய்தல்
(4) தாவரச் சாறுகளைப் பயன்படுத்திச் சவர்க்காரம் தயாரித்தல்

[பக். 3 ஐப் பார்க்க

**19.** ஊழியர்களை ஊக்குவித்தல் மற்றும் தேவையான வழிகாட்டுதல் என்பனவற்றைக் கொண்டுள்ள முயற்சியாளரின் வகிபாகமானது
(1) ஒரு வணிகருக்கான வகிபாகம் ஆகும். (2) ஒரு முகாமையாளருக்கான வகிபாகம் ஆகும்.
(3) ஒரு உடைமையாளருக்கான வகிபாகம் ஆகும். (4) ஒரு தலைவருக்கான வகிபாகம் ஆகும்.

**20.** பின்வரும் ஆற்றல்களுள் முயற்சியாளர் ஒருவரின் மானுடத் திறன்களுக்குரியது யாது?
(1) முறைசார்ந்த நடைமுறையைப் பின்பற்றி சிறந்த ஓர் ஊழியரை வேலைக்கு அமர்த்துவதற்கான ஆற்றல்
(2) ஊழியர்களுக்கு வேலைகளைக் கையளிப்பதற்கும் அவர்களை ஊக்குவிப்பதற்குமான ஆற்றல்
(3) புதிய சந்தைகளைக் கண்டுபிடிப்பதற்கான ஆற்றல்
(4) குழுவாக வேலை செய்வதற்கான ஆற்றல்

**21.** வணிகமொன்றின் அகச்சூழல் காரணிகளை உள்ளடக்கியுள்ள விடையைத் தெரிவுசெய்க.
(1) உடைமையாளர்கள், ஊழியர்கள், போட்டியாளர்கள்
(2) போட்டியாளர்கள், வழங்குனர்கள், வாடிக்கையாளர்கள்
(3) உடைமையாளர்கள், ஊழியர்கள், முகாமையாளர்கள்
(4) ஊழியர்கள், வழங்குனர்கள், வாடிக்கையாளர்கள்

**22.** வணிகமொன்றின் ஒழுக்கத்தைத் தீர்மானிப்பதில் செல்வாக்குச் செலுத்தும் பிரதான மூன்று தரப்பினர்
(1) உரிமையாளர்கள், நிறுவன அங்கத்தவர்கள், வெளிவாரிச் சமூகம்
(2) உரிமையாளர்கள், சமூக அமைப்புக்கள், ஊழியர்கள்
(3) வழங்குனர்கள், வாடிக்கையாளர்கள், உடைமையாளர்கள்
(4) உரிமையாளர்கள், வாடிக்கையாளர்கள், முதலீட்டாளரகள்

**23.** இலங்கையின் பொருளாதாரத்தில் முதனிலைத் துறைக்கு உரித்தான ஒரு வணிகம்
(1) சப்பாத்து உற்பத்தி செய்தல் (2) கட்டடங்களை நிர்மாணித்தல்
(3) காப்புறுதிச் சேவைகளை வழங்குதல் (4) இரத்தினறகற் கைத்தொழில்

**24.** நீரிழிவு நோயாளர்களுக்குரிய விசேடமான காலணிகளை அறிமுகஞ் செய்தல்
(1) தற்போதைய சந்தைக்கு தற்போது காணப்படும் உற்பத்திப்பொருளொன்றை வழங்குதல் எனப்படும்.
(2) புதிய சந்தைக்கு தற்போது காணப்படும் உற்பத்திப்பொருளொன்றை வழங்குதல் எனப்படும்.
(3) தற்போதைய சந்தைக்கு புதிய உற்பத்திப்பொருளொன்றை வழங்குதல் எனப்படும்.
(4) புதிய சந்தைக்கு புதிய உற்பத்திப்பொருளொன்றை வழங்குதல் எனப்படும்.

**25.** முயற்சியாளர் ஒருவரின் புதிய எண்ணம் சந்தைப்படுத்தத்தக்க பொருள் அல்லது சேவையாக மாற்றப்படுதல்
(1) புத்தாக்கம் ஆகும். (2) ஆக்கத்திறன் ஆகும்.
(3) தூர நோக்கு ஆகும். (4) இடரை ஏற்றுக்கொள்ளுதல் ஆகும்.

**26.** சிக்கனமான பால்மா பொதியொன்றை (Budget pack) அறிமுகம் செய்வதன் மூலம் சந்தைக்குள் நுழைதல் இனங்காணப்படுவது
(1) உற்பத்திப்பொருளை பேதப்படுத்துதல் ஆகும்.
(2) சந்தைவெளியை நிரப்புதல் ஆகும்.
(3) புத்தாக்கம் ஆகும்.
(4) விசேடமான புதியபொருள் ஆகும்.

**27.** நிறுவனம் ஒன்றுக்குப் பல்திறன்களைக் கொண்ட முகாமையாளர்களை ஆட்சேர்ப்புச் செய்தல்
(1) ஒரு பலவீனம் ஆகும். (2) ஒரு வாய்ப்பு ஆகும்.
(3) ஒரு பலம் ஆகும். (4) ஓர் அச்சுறுத்தல் ஆகும்.

**28.** வணிகம் ஒன்றுக்கான நிதியைப் பெற்றுக்கொள்ளல் மற்றும் ஒதுக்குதல் தொடர்பான தகவல்களை உள்ளடக்கிய திட்டம்
(1) நிர்வாகத் திட்டம் ஆகும். (2) நிதித் திட்டம் ஆகும்.
(3) உற்பத்தித் திட்டம் ஆகும். (4) சந்தைப்படுத்தல் திட்டம் ஆகும்.

**29.** வணிக நிறுவனங்களை தனியார்துறை, பொதுத்துறை என வகைப்படுத்துவது
(1) இலாப அடிப்படையில் ஆகும். (2) நோக்க அடிப்படையில் ஆகும்.
(3) உடைமை அடிப்படையில் ஆகும். (4) ஊழியர் எண்ணிக்கை அடிப்படையில் ஆகும்.

**30.** இலாபம் அல்லது நட்டத்தைத் தனியாக அனுபவிக்கக்கூடிய நிலையைக் காணமுடிவது
(1) பங்குடைமையில் ஆகும். (2) கூட்டிணைக்கப்பட்ட கம்பனிகளில் ஆகும்.
(3) தனியுடைமை வணிகங்களில் ஆகும். (4) திணைக்களங்களில் ஆகும்.

[பக். 4 ஐப் பார்க்க

**31.** வணிகமொன்று வரையறையுடைய வளங்களை வினைத்திறனாகப் பயன்படுத்துதல் அதனுடைய
(1) பொருளாதாரப் பொறுப்பாகும். (2) சட்டரீதியான பொறுப்பாகும்.
(3) தர்ம சிந்தனையான பொறுப்பாகும். (4) ஒழுக்கநெறிரீதியான பொறுப்பாகும்.

**32.** வணிகமொன்றின் வெளிவாரிச் சூழல் காரணிகளாவன:
(1) வாடிக்கையாளர்கள், விலை மட்டம், வேலைவாய்ப்பு
(2) ஊழியர்கள், சம்பள மட்டம், வட்டி வீதம்
(3) வளங்கள், விலை மட்டம், வேலைவாய்ப்பு
(4) போட்டியாளர்கள், முகாமையாளர்கள், ஊழியர்கள்

**33.** வணிகமொன்றின் அக்கறையுடைய தரப்பினரிடையே வித்தியாசமான எதிர்பார்க்கைகள் காணப்படும். அவற்றில் நுகர்வோனின் ஓர் எதிர்பார்க்கையாக அமைவது
(1) சட்டரீதியான பிரச்சினைகளைக் குறைத்தலாகும்.
(2) வரிகளைச் சரியாக அறிவிடுதலாகும்.
(3) சமூக மற்றும் கலாசார அபிவிருத்தியாகும்.
(4) நியாயமான விலைக்குத் தரமான உற்பத்திப்பொருட்களைக் கொள்வனவு செய்தல் ஆகும்.

**34.** தேசிய நியமங்களை நிர்ணயம் செய்தல், தர முறைமைகளைச் சான்றுப்படுத்தல் போன்ற நிதிசாரா ஊக்கமளிப்புக்களை வழங்குவது
(1) கைத்தொழில் தொழினுட்ப நிறுவகம் ஆகும். (2) கைத்தொழில் அபிவிருத்திச் சபை ஆகும்.
(3) ஏற்றுமதி அபிவிருத்திச் சபை ஆகும். (4) இலங்கைத் தர நிறுவகம் ஆகும்.

**35.** குறித்தவொரு காலப்பகுதியின் நிறைவில் காணப்படும் காசு மீதியைக் கணிப்பிடுவது
(1) காசு வெளிப்பாய்ச்சல்களில் இருந்து காசு உட்பாய்ச்சல்களைக் கழிப்பதன் மூலம் ஆகும்.
(2) காசு உட்பாய்ச்சல்களில் இருந்து காசு வெளிப்பாய்ச்சல்களைக் கழிப்பதன் மூலம் ஆகும்.
(3) காசு வெளிப்பாய்ச்சலையும் காசு உட்பாய்ச்சலையும் சேர்ப்பதன் மூலம் ஆகும்.
(4) சகல காசு உட்பாய்ச்சல்களையும் கூட்டுவதன் மூலம் ஆகும்.

- பின்வரும் சம்பவத்தை வாசித்து **36** தொடக்கம் **40** வரையுள்ள வினாக்களுக்கு விடை தருக.

சுகந்தனும் சமீரனும் சிறந்த நண்பர்கள் ஆவர். இவர்களின் சினேகபூர்வமான உரையாடலின்போது சுகந்தன் தான் தேசிய வளங்களைப் பயன்படுத்தி வணிகமொன்றை ஆரம்பிப்பதன் மூலம் ஒரு நாள் ஒரு முயற்சியாளராக வரமுடியுமெனச் சமீரனுக்குத் தெரிவித்தான். மேலும், தனக்கும் சமூகத்துக்கும் நாட்டுக்கும் ஒரு பயனுடைய நபராகத் தான் வரமுடியுமெனவும் விளக்கினான்.

ஆனால் எந்தவொரு நபரும் முயற்சியாளனாக வர முடியும் என்பதும் எந்தவொரு நபரும் வளர்ந்தவராகும் போது முயற்சியாண்மைத் திறன்கள் தானாகவே வளர்ச்சியடையும் என்பதும் சமீரனின் கருத்தாக இருந்தது. மேலும் சுகந்தனின் சாதாரண நடத்தைக் கோலமான சமூகமயமான மனப்பாங்குகள், நம்பிக்கைகள் ஆகியவற்றை முழுமையாக ஏற்றுக்கொள்ளல், விமர்சனங்கள், தோல்விகள் தொடர்பிலான அதிகளவிலான பயமும் விருப்பமின்மையும் அவனது வெற்றியை வரையறைப்படுத்துவதாகவும் சமீரன் குறிப்பிட்டான்.

**36.** தேசிய வளங்களைப் பயன்படுத்துவதன் மூலம் வணிகங்களை ஆரம்பித்தல் என்பது முயற்சியாண்மைக்கான
(1) வரையறுக்கப்பட்ட வெகுமதியாகும். (2) பிராந்திய மட்ட வெகுமதியாகும்.
(3) தேசிய மட்ட வெகுமதியாகும். (4) அபிவிருத்தி மட்ட வெகுமதியாகும்.

**37.** விமர்சனங்கள், தோல்விகள் தொடர்பாக சுகந்தனிடம் காணப்படும் அதிகளவிலான பயம், விருப்பமின்மை ஆகியன வரையறுக்கப்பட்ட காரணியாக செல்வாக்குச் செலுத்துவது
(1) சூழல்சார் உணர்வில் ஆகும். (2) இடரைத் தாங்குதலில் ஆகும்.
(3) ஆக்கத்திறனில் ஆகும். (4) தூர நோக்கில் ஆகும்.

**38.** தனக்கும் சமூகத்திற்கும் நாட்டுக்கும் பயனுள்ள நபராக வருவதற்கான சுகந்தனின் கனவை
(1) தூரநோக்காக இனங்காணலாம். (2) ஆக்கத்திறனாக இனங்காணலாம்.
(3) அர்ப்பணிப்பாக இனங்காணலாம். (4) சுயநம்பிக்கையாக இனங்காணலாம்.

**39.** "மக்கள் வயதுவந்தவர்களாகும்போது முயற்சியாண்மைத் திறன்கள் தானாகவே வளர்ச்சி அடையும்" இக்கூற்று
(1) உண்மையானதாகும். (2) பொய்யானதாகும்.
(3) பகுதியளவில் உண்மையானதாகும். (4) முற்று முழுதாக உண்மையானதாகும்.

**40.** என்றோ ஒரு நாள் முயற்சியாளனாக வரமுடியுமென்ற சுகந்தனின் உறுதிமிக்கத் தீர்மானம்
(1) ஓர் அச்சுறுத்தல் ஆகும். (2) ஒரு வாய்ப்பு ஆகும்.
(3) ஒரு பலவீனம் ஆகும். (4) ஒரு பலம் ஆகும்.

* *

[பக். 5 ஐப் பார்க்க

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது /All Rights Reserved]

නව නිර්දේශය/புதிய பாடத்திட்டம்/New Syllabus

NEW ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka
63 T I, II

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (සාමාන්‍ය පෙළ) විභාගය, 2016 දෙසැම්බර්
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை, 2016 டிசெம்பர்
General Certificate of Education (Ord. Level) Examination, December 2016

ව්‍යවසායකත්ව අධ්‍යයනය I, II
முயற்சியாண்மைக் கற்கை I, II
Entrepreneurship Studies I, II

## முயற்சியாண்மைக் கற்கை II

※ **முதலாம்** வினா உட்பட **ஐந்து** வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.

1. பின்வரும் சம்பவத்தைக் கவனமாக வாசித்து (i) தொடக்கம் (x) வரையுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.

உறுதியான நோக்கமுடைய இளைஞனான மிதிலன் தனது பாடசாலைக் கல்வியை முடித்ததன் பின்னர் சொந்த வணிகமொன்றை ஆரம்பிப்பதில் மிகவும் ஆவலுடையவராக இருந்தார். பாடசாலைக் கல்வியினூடாகப் பெற்றுக் கொண்ட அறிவினடிப்படையில் சூழலைப் பகுப்பாய்வு செய்தல், வணிகமொன்றை ஆரம்பிப்பதற்கான முன்தேவைப்பாடு என்பது அவருக்குத் தெரியும். அதன்படி நாட்டின் சனத்தொகை மற்றும் பொருளாதாரம் தொடர்பான தகவல்களை அவர் திரட்டிக்கொண்டார். இதனூடாக, முதியோர் சனத்தொகை அதிகரித்தல், பெரும்பாலான பெண்கள் வேலைவாய்ப்புக்குள் நுழைதல், குழந்தைகளைக் கவனிப்பதில் காணப்படும் பிரச்சினைகள், வீட்டுப்பணிகளை முறையாகக் கொண்டு நடத்துவதில் காணப்படும் பிரச்சினைகள், இளைஞர் சமுதாயத்தின் மனப்பாங்குரீதியான மாற்றங்கள், வங்கிக்கடன் வட்டிவீதங்கள் உயர் மட்டத்தில் காணப்படல், வாழ்க்கைச்செலவில் ஏற்பட்டுள்ள திடீர் அதிகரிப்பு போன்ற சில பிரச்சினைகளை சனத்தொகை மற்றும் பொருளாதாரம் தொடர்பில் இனங்கண்டு கொண்டார்.

(i) 'வணிகச் சூழல்' என்பதனால் நீர் கருதுவது யாது?

(ii) மிதிலன் கற்றுக் கொண்ட புற வணிகச் சூழல்களைக் குறிப்பிடுக.

(iii) புறச்சூழலைப் பகுப்பாய்வதனூடாக மிதிலன் இனங்கண்டு கொள்ளக் கூடியதாயிருந்த **இரண்டு** வாய்ப்புக்களையும் **இரண்டு** அச்சுறுத்தல்களையும் குறிப்பிடுக.

(iv) மிதிலனால் இனங்காணப்பட்ட வணிக வாய்ப்புக்களைப் பயன்படுத்தி ஆரம்பிக்கக்கூடிய **நான்கு** வணிகங்களைக் குறிப்பிடுக.

(v) ஒரு வெற்றிகரமான முயற்சியாளராவதற்கு மிதிலன் அபிவிருத்தி செய்துக்கொள்ள வேண்டிய **இரண்டு** திறன்களைக் குறிப்பிடுக.

● மிதிலன் மேலே இனங்கண்ட வாய்ப்புக்களில் இருந்து புதிய வணிகமொன்றைத் தொடங்கத் தீர்மானித்ததுடன் அதனை முறையானதொரு திட்டத்தின் அடிப்படையில் கொண்டு நடத்த எண்ணினார். அதற்காக பின்வரும் செலவுகளைத் தாங்கிக்கொள்ள வேண்டியேற்படுமென மதிப்பிட்டுள்ளார்.

| | ரூ. |
|---|---|
| கட்டடம் | 1 000 000 |
| அலுவலகத் தளபாடங்கள் | 460 000 |
| பதிவுக் கட்டணம் | 2 000 |
| வணிகத் திட்டத்தைத் தயாரிப்பதற்கான செலவுகள் | 25 000 |
| தொடக்க விழாவிற்கான செலவுகள் | 18 000 |
| சந்தை அளவையாய்வுச் செலவுகள் | 15 000 |
| நாளாந்த ஊழியர் கூலிகள் | 20 000 |
| நாளாந்த போக்குவரத்துச் செலவுகள் | 1 000 |
| ஏனைய நாளாந்த செலவுகள் | 19 000 |

மேலே தரப்பட்டுள்ள தகவல்களைப் பயன்படுத்தி,

(vi) மொத்த நிலையான சொத்துக்களின் பெறுமதியைக் கணிக்க.

(vii) ஆரம்பிப்பதற்கு முன்னர் ஏற்பட்ட மொத்தச் செலவுகளின் பெறுமதியைக் கணிக்க.

(viii) தொழிற்படு மூலதனத்தைக் கணிக்க.

(ix) மொத்த முதலீட்டை மதிப்பிடுக.

(x) மிதிலன் வணிகத்தின் காசு வெளிப் பாய்ச்சல்கள் **இரண்டைத்** தருக. (02 × 10 = 20 புள்ளிகள்)

[பக். 6 ஐப் பார்க்க

**2.** (i) முயற்சியாளர் ஒருவருக்கும் வணிகர் ஒருவருக்கும் இடையே காணத்தக்க **இரண்டு** ஒற்றுமைகளையும் **இரண்டு** வேற்றுமைகளையும் தருக.

(ii) சமூக நலனுக்கு முயற்சியாளர் ஒருவர் பங்களிப்புச் செய்யக்கூடிய **நான்கு** வழிகளைக் குறிப்பிடுக.

(iii) தற்போதைய சமூகத்தில் காணத்தக்க **இரண்டு** வகையான முயற்சியாளர்களைக் குறிப்பிடுக.

(iv) பெண்கள் முயற்சியாளராக வருவதற்கு ஊக்கமளிக்கக்கூடிய **நான்கு** பலங்களைக் குறிப்பிடுக.

(v) வணிகமொன்றில் அக்கறை செலுத்துவதன் மூலம் ஊழியர்கள் மற்றும் அரசாங்கம் ஆகியன பெற்றுக்கொள்வதற்கு விரும்பும் எதிர்பார்க்கைகள் **இரண்டு** வீதம் ஒவ்வொன்றுக்கும் தனித்தனியே குறிப்பிடுக.

(02 × 05 = 10 புள்ளிகள்)

**3.** (i) வணிக நிறுவனம் ஒன்றில் காணத்தக்க **நான்கு** பொதுவான குணவியல்புகளைக் குறிப்பிடுக.

(ii) வணிக நிறுவனங்களை வகைப்படுத்துவதற்குப் பயன்படுத்தப்படும் **இரண்டு** நியதிகளைத் தருக.

(iii) வணிக நிறுவனமொன்றைக் கருத்திற் கொள்கையில் 'பலம்' என்பதனால் நீர் கருதுவது யாது? சிற்றளவு வணிகமொன்றில் காணத்தக்க பலங்கள் **இரண்டு** தருக.

(iv) தேசிய பொருளாதாரத்துக்கு முயற்சியாண்மையின் **நான்கு** அனுகூலங்களைத் தருக.

(v) ஒரு நபருக்கான **இரண்டு** தேவைகளைக் குறிப்பிடுவதுடன், நீர் குறிப்பிட்ட ஒவ்வொரு தேவைகளுக்குமான **இரண்டு** விருப்பங்களையும் தருக.

(02 × 05 = 10 புள்ளிகள்)

**4.** (i) ஆக்கத்திறனை முன்னேற்றுவதற்கான **நான்கு** வழிமுறைகளைக் குறிப்பிடுக.

(ii) உமது பிரதேசத்தில் காணப்படும் **இரண்டு** பிரச்சினைகளைக் குறிப்பிடுவதுடன் அவை ஒவ்வொன்றுக்கும் ஆக்கத் திறனான தீர்வுகள் ஒவ்வொன்று தருக.

(iii) விஞ்ஞான மற்றும் தொழினுட்பச் சூழல் மாற்றங்களின் ஊடாக உருவாகக்கூடிய **இரண்டு** வணிக வாய்ப்புக்களைத் தருக.

(iv) வணிகச் சூழலைக் கற்பதன் மூலம் முயற்சியாளரொருவருக்குக் கிடைக்கும் **இரண்டு** அனுகூலங்களைக் குறிப்பிடுக.

(v) வணிகமொன்றின் சட்டரீதியான பொறுப்புக்களுக்கு **இரண்டு** உதாரணங்கள் தருக.

(02 × 05 = 10 புள்ளிகள்)

**5.** (i) வணிகமொன்றை ஆரம்பிப்பது தொடர்பிலான எண்ணத்தை அமுல்படுத்துவதற்கு முன்னர் முயற்சியாளர் ஒருவர் கருத்திற் கொள்ளவேண்டிய **நான்கு** காரணிகளைக் குறிப்பிடுக.

(ii) வணிகச் சூழலில் காணப்படும் போட்டிசார் தன்மையை எடுத்துக்காட்டுவதற்கு **இரண்டு** உதாரணங்கள் தருக.

(iii) வணிகமொன்றுக்கான இடஅமைவைத் தீர்மானிப்பதில் கருத்திற்கொள்ள வேண்டிய **நான்கு** காரணிகளைக் குறிப்பிடுக.

(iv) சிறந்த வணிக எண்ணம் ஒன்றின் **நான்கு** குணவியல்புகளைத் தருக.

(v) முயற்சியாண்மைக் கலாசாரமொன்று உருவாவதற்கு ஏதுவாக அமையும் **இரண்டு** சமூக பொருளாதாரக் காரணிகளைத் தருக.

(02 × 05 = 10 புள்ளிகள்)

**6.** (i) 'வணிகத் திட்டம்' என்றால் என்ன என்பதனை உமது சொந்த மொழிநடையில் விளக்குக.

(ii) வணிகத் திட்டமொன்றின் **நான்கு** கூறுகளைக் குறிப்பிடுக.

(iii) வணிகத் திட்டமொன்று ஏன் அவசியம்? **நான்கு** காரணங்களைக் குறிப்பிடுக.

(iv) சந்தைப் பகுப்பாய்வொன்றின் மூலம் இனங்காணக்கூடிய **இரண்டு** விடயங்களைத் தருக.

(v) பின்வரும் உற்பத்திப்பொருட்களுக்கான இலக்கு வாடிக்கையாளர் குழுக்களைக் குறிப்பிடுக.

(அ) வினோதமான கைப் பைகள்
(ஆ) விளையாட்டுப் பொருட்கள்
(இ) போதனை நூல்கள்
(ஈ) சீனியில்லாத ஐஸ்கிறீம்

(02 × 05 = 10 புள்ளிகள்)

**7.** தியாகு என்பவர் தனியுடைமை வணிகமொன்றை ஆரம்பித்து நடாத்த எதிர்பார்க்கின்றார். அவரது வணிகத்தின் 2017 ஆம் ஆண்டுக்கான வணிகத் திட்டத்திலிருந்து பிரித்தெடுக்கப்பட்ட தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| | ரூ. |
|---|---|
| உடைமையாளரால் முதலிடப்பட்ட பணம் | 800 000 |
| வங்கிக்கடன் | 1 000 000 |
| எதிர்பார்க்கப்படும் விற்பனைகள் (காசு) | 700 000 |
| எதிர்பார்க்கப்படும் விற்பனைகள் (கடன்) | 400 000 |
| வருமதியாளரிடமிருந்து கிடைப்பவை | 300 000 |
| கடன் தவணைப்பணச் செலுத்தல் | 100 000 |
| மின்சாரக் கட்டணச் செலுத்தல் | 30 000 |
| விற்பதற்கான பொருட்கள் கொள்வனவு | 500 000 |
| தொலைபேசிக் கட்டணங்கள் செலுத்தல் | 15 000 |
| உபகரணக் கொள்வனவு | 200 000 |
| ஊழியர் சம்பளங்கள் | 300 000 |

**வேண்டப்படுவன :**

(i) 2017 ஆம் ஆண்டிற்கான தியாகு வணிகத்தின் எதிர்வுகூறப்பட்ட காசுப் பாய்ச்சல் கூற்று (06 புள்ளிகள்)

(ii) 2017 ஆம் ஆண்டின் இறுதியில் தியாகு வணிகத்தின் காசு மீதி (02 புள்ளிகள்)

(iii) தியாகு ஆரம்பிக்க உத்தேசிக்கும் தனியுடைமை வணிகத்தின் **நான்கு** அடிப்படைக் குணவியல்புகள் (02 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

* * *